28—

பாய்ச்சல்—ஆனந்தவாடி நகர தார்ச்சாலை.

14716—டாக்டர் பெ. வீரபாண்டியன்: பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் தொகுதியில் பாய்ச்சல் கிராமத்தில் இருந்து ஆனந்தவாடி வரை அகல தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாண்டி-கிருஷ்ணகிரி சாலையில் திருவண்ணாமலை முதல் கிருஷ்ணகிரி வரையில் உள்ள 130 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியை தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்கு உயர்த்துவதற்காக மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் மைய அரசுக்கு மாநில அரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒப்புதல் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாய்ச்சல் முதல் ஆனந்தவாடி வரையிலுள்ள சாலைப்பகுதி இதில் அடங்கும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் பகுதியில் பாய்ச்சல் கிராமத்தில் இருந்து ஆனந்தவாடி கிராமம் வரை கிட்டத்தட்ட 25 கி.மீ. தூரம் உள்ளது. இந்தச் சாலை, சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை-சம்புவராயர், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டங்கள் மட்டுமின்றி கோவா, ஆந்திரா, கேரளா, பாண்டி ஆகிய மாநிலச் சாலைகளையும் இணைக்கின்றது. கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 500 வாகனங்கள் இந்த வழியாகச் செல்கின்றன. குறுகிய சாலையாக இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. தார்ச் சாலையிலிருந்து மண் சாலைக்கு கிட்டத்தட்ட 1 அடி சரிவு இருக்கிறது. சரக்கு ஏற்றிக் கொண்டு எதிரிலே லாரி வந்தாலும், எதிரும், புதிரும் லாரி வருகின்றபொழுது முதலிலே வாகனத்தை யார் இறக்குவது என்ற பிரச்சினை ஏற்பட்டு, டிராபிக் ஜாம் என்ற நிலை ஏற்படுகிறது. எனவே, இந்த 25 கி.மீ. தூர தார்ச் சாலையை பகுதி 2 திட்டத்தில் சேர்த்து செயல்படுத்த அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1993 அக்டோபர் 27[

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்த பாண்டி-கிருஷ்ணகிரி சாலையிலே, பாய்ச்சல் முதல் ஆனந்தவாடி வரை உள்ள சாலையும் அடங்கியிருக்கிறது. ஆகவேதான் மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு இருக்கிறது என்று சொன்னேன். இதிலே 25 கி.மீ. வரை இருவழிச் சாலையாக இருக்கிறது. மீதம் உள்ள 16 கி.மீ. தூரம் ஒரு வழிச் சாலையாக இருக்கிறது. அதனால் இந்த ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழே இந்தச் சாலை சேர்க்கப்படவில்லை. ஆகவேதான் மொத்தமாக பாண்டி-கிருஷ்ணகிரி சாலை அகலப்படுத்தப்படுகின்றபொழுது இந்தச் சாலையையும் நல்லபடியாக பராமரிப்பதற்காக, தேசிய நெடுஞ்சாலையின் தரத்திற்கு உயர்த்துவதற்காகத்தான் இப்படிப்பட்ட திட்டத்திற்கு மைய அரசின் ஒப்புதலுக்காக, அனுப்பப்பட்டு இருக்கிறது. ஆகவே, இருக்கின்ற போக்குவரத்து அவசியம் கருதி, மாநில அரசு, நிதி வசதியைப் பொறுத்து எந்த அளவுக்கு அந்தச் சாலையைப் பராமரிக்கலாம் என்பதை கவனத்தோடு பரிசீலிக்கும். அதற்குப் பின்னாலே மைய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் தேசிய நெடுஞ்சாலையின் தரத்திற்கு இந்தச் சாலை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–40

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் 25 கி.மீ. தூரத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1989–ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அப்போது இருந்த பொதுப் பணித்துறை அமைச்சர் தன்னுடைய தொகுதியான காட்பாடிக்கு அந்தத் தொகையை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார். ஒரேயடியாக 25 கி.மீட்டரையும், இரு வழிப் பாதையாக அமைக்க முடியவில்லையென்றாலும், வருடத்திற்கு 8 கி.மீட்டராவது இருவழிச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல அங்கே ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைக் கணக்கிட்டு முன்னுரிமை கொடுத்து அதற்கான பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, திரு. எஸ். அண்ணாமலை, இருக்கையில் இல்லை.

வினா எண் 30, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.